ஸ்ரீ:

# அருளிச்செயல்

ஸ்ரீ. உ. வே. T. C. A. ஸ்ரீனிவாஸவரதன், I. A. S. (RETD.,)
(Former Home Secretary to the Government of India)

உலகத்தில் பரவியுள்ள பல மதங்கள் வெவ்வேறு நூல்களை தம் மூலநூலாக மதித்துப் பாராட்டி, அவற்றை அடிப்படையாக வெவ்வேறு கொள்கைகளையும், பழக்க வழக்கங்களையும் வாழும் வழிகளாக கொண்டிருக்கின்றன. எம்பெருமானார் தர்சனத்தை சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் வடமொழி, தென்மொழி வேதங்களை, உபய வேதாந்த மெனப்படும் திரளை, தம்முடைய நிதியாகக் கொண்டாடி வருகிறார்கள். பல மதங்களில், ஊர்வலங்கள், கூட்டங்கூடி தொழுதல் முதலிய வழக்கங்களிருந்தாலும், யாவரும் தங்கள் மூல மதநூல்களை தேவாலய ஊர்வலங்களில், கூட்டமாய் முறையாய் யாவருக் கும் கேட்கும்படி பாராயணம் செய்வதென்ற வழக்கத்தை கடைப்பிடித்து வருவதாகத் தெரியவில்லை. ஆனால் வடமொழி வேதங்களை பாராட்டும் நாமெல்லோரும், காஷ்மீரத் திலிருந்து குமரிவரை, த்வாரகையிலிருந்து காமரூபம்வரை, பாரதமெங்கும், வேதபாரா யணமென்ற வழக்கத்தை இன்றும் காண்கிறோம். வேதகோஷம் வைதிக மதத்தின் மாறாத சின்னமாய் இருந்து வருகிறது. வடமொழி வேதத்திற்கொப்ப தென்மொழி வேதபாராயணம் தென்னாட்டில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் மூலம், ப்ரபலமாக நடத்தப்படுகிறது. இந்த வழக்கம் எப்பொழுது ஏற்பட்டது? ஸ்ரீமந்நாதமுனிகள் காலத்தி லிருந்து, அவர்தம் ஏற்பாட்டினால், ஆயிரம் வருஷங்களுக்கு மேலாகவும் பிரபலமாயிற்று என்று பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

தென்மொழி வேதம், தமிழ வேதமெனப்படுவது எது? ஆண்டாள், மதுரகவி உட்பட ஆழ்வார்கள் பன்னிருவருடைய நாலாயிரம் பாடல்களைத்தான் ஸ்ரீவைஷ்ணவர் கள், எம்பெருமானார் தர்சனத்தை சேர்ந்தவர்கள், தென்மொழி வேதமென பாராட்டு கின்றனர். அந்த நாலாயிரம் பாடல்களை, திவ்யபிரந்தமென்றும், நாதமுனிகள் காலந் தொடங்கி, அருளிச்செயலென்றும், வடமொழி வேதங்களைக் கூட்டி, உபய வேதாந்த மென்றும் வழங்குகிறார்கள். "ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி... செய்ய மறைதன்னுடனே சேர்ந்து" என்று மணவாள மாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் கூறின வாழ்த்து, தென்னாசார்ய சம்பிரதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு வேதவாக்கு.

—வைதிகர்கள் பல நூல்களை தினப்படி பாராயணம் செய்கிறார்கள். வால்மீகிரிஷி இயற்றிய ஸ்ரீராமாயணம், வ்யாஸரிஷியின் பாரதத்திலிருந்து ஸ்ரீமத் பகவத்கீதை முதலியவைகளும், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் போன்ற துதிநூல்களும் இப்படி பாராயணம் செய்யப்படுகின்றன. அவற்றை ஆசார்யன்மூலம் முறையே காலக்ஷேபம் செய்வதென்றும் வழக்கமிருந்து வருகிறது. ஆனால் இவற்றை, சந்தை சொல்லி, உருப்போட்டு மனப்பாடமாக்கி, அவற்றை ஓதும் முறையும், க்ரமமும் ஸ்வரமுமறிந்து, சேவிப்பது, கோஷ்டியாய் தேவாலய ஊர்வலங்களிலும், கோயில்களிலும் தினப்படியாகவும் விசேஷங்களிலும் காற்றிசையிலும் யாவரும் கேட்கும்படி, உரக்க ஸேவிப்பதென்பது இந்த உபய வேதாந்தங்களுக்குமட்டும் ஒரு பெருமை தென்னாட்டில் முக்கியமாக ஏற்பட்டிருக்கிறது. இப்பெருமைதான், தென்னாட்டு முறையில் நடக்கும் விஷ்ணு கோயில்களின் தனிப்பெருமை. இப்பெருமை குறையாமல் ஆயிரமாண்டுகளாக நடந்து வரும் தொடர்பு விடாமல் நடத்திவரவேண்டிய பொறுப்பு பெரிய பொறுப்பு; அதை நிறைவேற்றி வைப்பவர்களெல்லோரும் போற்றுதற்குரியவர்கள்.

இந்தத் தொடர்பு தென்னாட்டில் தமிழகத்தில் சிறப்பாக அமைந்திருந்தாலும், தமிழ் அறியாத ப்ராந்தியங்களிலும், ஸ்ரீ வைஷ்ணவக் கோயில்களிலும், திருமாளிகைகளிலும் பரவியிருக்கின்றன. தெலுங்கு, கன்னட தேசங்களில் அந்தந்த மொழிகளால் அருளிச்செயல்களை மனப்பாடமாக்கி சேவிப்பது ஒருபுறம். மார்வாடம், மத்யபிரதேசங்கள் போன்ற ஹிந்தி பேசுமிடங்களிலும், இந்த தொடர்பைக்காணமுடியும். மத்யப்ரதேசத்தில் ரீவா நகரத்தில், நூறு நூற்றைம்பது வருஷங்களுக்குள் ஏற்படுத்திய ஒரு திருக்கோயிலில் இன்றும், ஹிந்திமூலம் அருளிச்செயலை அதிகரித்து தமிழே தெரியாவிட்டாலும், பிரதிதினம் அருளிச்செயல்களை சேவிப்பதை கேட்கும்போது, நம்மாழ்வார் "எங்ஙனே சொல்லினுமின்பம் பயக்குமே' என்று(திருவா 7-9-11) இத்தகையோரைத்தான் நினைத்து கூறினாரென்று தோன்றும். அருளிச்செயல் எத்தகைய செல்வம்? உபயவேதாந்த ப்ரவீணர்களுக்கொரு திலகமான வேதாந்த தேசிகர் 'தமிழ்மாலைகள்நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' என அறுதியிட்டார். உபயவேதாந்தங்களையும் முறையே கற்றுணர்ந்தால்தான் வேதாந்த நுட்பங்கள் தெளிவுறுமென்பது அவருடைய முக்கிய கருத்து. "வேதமனைத்துக்கும் வித்தாகும்" என்று வேதப்பிரான் பட்டர் திருப்பாவையைப்பற்றி கூறினார். இவையெல்லாம் வடமொழி தமிழ் வேதங்களை, கற்றவல்லோர்களின் பேச்சு. நம்போன்றவர்கள் ஆழ்வார்களின் ஈரச்சொல் கேட்டுநெஞ்

சுருகி, நீர்ப்பண்டமாகி, மேலும் மேலும் கேட்க ஆசைத்தான் படலாம். "காப்பாருமில்லை கடல்வண்ணா உன்னை" (பெரியாழ்வார் 2-3-1) என்று பரமனிடம் காட்டிய பரிவு; தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுறைக்குமேல், என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர்" (பெரியாழ்வார், 4-10-2) என்று அபார நம்பிக்கையும்; "எற்றைக்குமேழேழ் பிறவிக்கும் உன்றன்னோடுற்றோமே யாவோமுனக்கே நாமாட்செய்வோம், மற்றைநங்காமங்கள் மாற்று என்று வேதாந்தசாரத்தை சொன்ன ஆண்டாளுடைய ப்ரேமத்தை என்ன சொல்லுவது? "கள்ள மாதவா கேசவா உன் முகத்தன கண்களல்லவே" (நா. தி 2-5) என்றும் "ஏலாப் பொய்களுரைப்பான்" என்றும் (நா. தி. 14-3) "தருமமறியாக்குறும்பன்" என்றும் (நா. தி. 14-6) சொந்தத்தோடு பூசலிடுகிறாள். குலசேகராழ்வார் "வண்ணச் செஞ்சிறுகை விரலனைத்தும் வாரிவாய்க் கொண்டு வடிசிலின் மிச்சில் உண்ணப்பெற்றிலேன்" என்றும். (பெரு. தி 7-6) "வா போகுவா இன்னம் வந்தொருகால் கண்டுபோ" (பெரு தி. 9-4) என்றும் நம்மை கலக்குகிறார். ஒவ்வொருவரும் நெஞ்சத்தை நெகிழ வைக்கும்போது யாரை குறிப்பாக சொல்வது. நம்மாழ்வாரோ ப்ரபன்ன கூடஸ்தர். அவருடைய கிருபையால்தான் அருளிச்செயல் முழுவதும் ஸ்ரீமந் நாதமுனிகள் மூலமாகத் திரும்பக்கிடைத்தன. அவர் பாடத்தொடங்கின உடனே "பொய்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்குமழுக்குடம்பும், இந்நின்ற நீர்மையினியாமுறாமை" என்று விண்ணப்பம் செய்தார். அவருடைய திருவாய்மொழிக்கு பகவத் விஷயமென்ற தனிச்சிறப்பு ஏற்பட்டிருக்கிறது. அவரோ பழுத்தஞானி; "மயர்வறமதி நலம்" குடிகொண்டபூர்ணர்; எனதாவியுள் கலந்த பெருநல்லுதவிக்கைமாறு, எனதாவிதந்தொழிந்தேன்" என்று ஒருவாறு சுயசரிதையை ஆரம்பித்து அதே மூச்சில் ஈற்றடியில் 'எனதாவியார் யானார் தந்தநீ கொண்டாக்கினையே' (திருவாய் 2-3-4) என்று ஸ்வரூப ஞானத்தெளிவுரைக்கிறார். மண்ணைத்துழாவி "வாமனன் மண்ணிது" வென்னும் (4-4-1) "தனக்கேயாகவெனைக் கொள்ளும்" என்றும் (2-9-4) கூறின மனப்பக்குவமுடையவர். இருந்தாலும் ரிஷிகளைப்போலன்றி "அருளின பக்தியால் உள்கலங்கி சோகித்து மூவாறு மாசம் மோஹித்து வருந்தி ஏங்கித் தாழ்ந்தசொற்களாலே நூற்கிற இவர்" ஆவர் ஆழ்வார். (ஆசார்யஹ்ருதயம் முதல் ப்ரகரணம் சூத்திரம் 58). ஆசார்ய ஹ்ருதயத்தில் ஒவ்வொரு சூத்திரத்திலும்

ஒவ்வொரு பதத்திற்கும் ப்ரமாணமும் தனி; கருத்தும் தனி. இந்த மஹா வாக்யத்தை விவரிக்க இடமில்லை. ஆழ்வார் மூவாறு மாதங்கள் மோகித்த விடங்களைப் பார்த்தால் இவருடைய திருவுள்ளத்தை எவ்வாறு அறியமுடியும்? முதல் தடவை "எத்திறம் உரலினோடிணைந்திருந்தேங்கிய வெளிவே" என்று (திரு 1-3-1) கண்ணிநுண் சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய கண்ணனின் ஏக்கத்தை நினைத்து, மறுதரம் பிறந்த வாறும் வளர்ந்தவாறும்" என்று (திரு 5-10-1) க்ருஷ்ணவதார ப்ரஸ்தாவம் வந்த போது, மூன்றுவது தடவை "கண்கள் சிவந்து பெரியவாய்" என்று (திரு 8-8-1) அவயவங்கள் ஒரு நிமிஷத்தில் வண்ணம் மாறும் வாய்ப்பைக் கண்டு, இது எப்படியோவென்று ஒவ்வொரு தடவையும் ஆறுறு மாதங்கள் மோகித்துக் கிடந்தா ரென்று தொன்மரபு. இத்தகைய திருவுள்ளத்தை ஆழங்காலிட கூரத்தாழ்வான் தவச் செல்வர் பட்டருக்கே முடியவில்லையென்றும் சொல்வர். "கங்குலும் பகலும்" என்று துவங்கும் திருவாய்மொழி (7-2) வ்யாக்யான ப்ரவேசம் ஈடு; "பட்டர் இத்திருவாய் மொழியருளிச்செய்யும் போதெல்லாம் 'ஆழ்வார்க்கு ஓடுகிற தசையறியாதே அவரு டைய பாவ வ்ருத்தியுமின்றிக்கே யிருக்கிற நாம் என் சொலலுகிறோம்? என்று திருமுடி யிலே கையை வைத்துக் கொண்டிருப்பார்" ஆயிரமாண்டுகளாக ஆழ்வார்களின் அருளிச்செயல் செல்வத்தைக் கொடுத்தவர்கள் இன்றும் அனுபவித்து வருகிறார்கள்.

இச்செல்வம் யாருக்கு சொந்தம்? யாருடைய சொத்து? இவற்றின் அதிகாரிகள் யார்? முறையே மனப்பாடம் செய்து நாலாயிரத்தையும் சொல்ல வல்லவர் இவற்றின் பெரிய பங்காளிகள். ஆனால் மனப்பாடம் மட்டும் போதாது. மறந்தும் போகும்; மறக் காவிடினும் நிறைக்காது, தங்காது. "சீரார் திருவேங்கடமே, திருக்கோவலூரே, மதிட் கச்சியூரகமே.........போரயிரமும் பிதற்றி பெருந்தெருவே ஊராரிகழிலுமூராதொழியேன் நான்" என்று கலியன் சிறிய திருமடலில் அருளிச்செயல் செல்வம் மறவாது குறை யின்றி வளர வழி சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு திவ்ய தேசத்திலும், ஒன்றையும் விடாமல் "ஊராய எல்லாம் ஒழியாமே" நடுத்தெருவிலே பேரருளாளன் முன்னே ஆயிர மாயிரமாயிருக்கும் திவ்ய ப்ரபந்தங்களை சேவித்து (திருவாய்மொழி அமலனுதிபிரான் முதலிய ஸ்ரீஸூக்திகளை வீதிகளில் சேவிப்பதில்லை) மகிழ்வித்துதான் இந்த சொத்தை காப்பாற்றி வைத்தனர். இந்த சேவை முறையின் ஒரு முக்கிய சிறப்பையும்

ஒவ்வொரு ஆழ்வாரும் கூறியுள்ளனர். அருளிச்செயலில் முதல் ப்ரபந்தம் திருப்பல்லாண்டு. அதிலேயே பெரியாழ்வார் "சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே'' என்று முடித்து இயல் கோஷ்டியை குறிப்பிட்டார். நம்மாழ்வார் ஸ்பஷ்டமாக தெளிவாகக் கூறுகிறார் (திரு 2-3-1). "ஆயிரத்துள் இவை பத்துமுடன்பாடி குழாங்களாயடியீருடன் கூடி நின்றாடுமினே'' யென்று. பெருந்திரளாய் பெரிய கோஷ்டியாய் இயல் சேவிக்கப் படுமானால், அருளிச்செயல் செல்வம் தழைக்கும், மணக்கும், பெருகும்.

அருளிச்செயலை கற்றவர்கள் மட்டும்தான் உரிமை கொள்ளலாமென்பதில்லை. திருமழிசையாழ்வார் தம்முடைய பொழுதுபோக்கைப் பற்றி விவரமாக தம்முடைய நான்முகன் திருவந்தாதியில் (63) "தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன்போது'' என்று தெரிவிக்கும்போது ஒரு பாசுரம் கூட தெரியாத பாமரர்களுக்கு கேட்டு மகிழ்வதில் என்ன தடை யிருக்கக்கூடும். கேட்க சௌகர்யங்கள் மட்டும் ஏற்படவேண்டும். இயலோசை கேட்க கேட்க தன்னைத்தானே சுவைக்க வைக்கும். கேட்பதில் கொண்ட ஆசை — ஜிஞ்ஞாசை தானே அறிவுக்கு, ஞானத்திற்கு திறவுகோல். ஆதலால் அருளிச்செயல் கைங்கர்யம் பல்லாண்டு பல்லாயிரமாண்டுகள் வளரட்டும்.



ஊழிதொறும் ஊழிதொறும் உலகமுய்ய உம்பர்களும் கேட்டுய்ய அன்பினாலே வாழியெனும் பூதம் பேய் பொய்கை மாறன் மழிசையர்கோன் பட்டர்பிரான் மங்கை வேந்தன் கோழியர்கோன் தொண்டர் துகள் பாணன் கோதை குலமுனிவன் கூறிய நூலோதி வீதி வாழியென வருந்திரளை வாழ்த்துவார் தம் மலரடி என் சென்னிக்கு மலர்ந்தபூவே.